North West London Collaboration of
Clinical Commissioning Groups

# பராமரிப்பை மேம்படுத்துவதற்கு உங்கள் தகவலை பகிர்ந்து கொள்ளுதல்

உங்களுக்கு சிறந்த பராமரிப்பை வழங்குவதற்காக நார்த் வெஸ்ட் லண்டன் சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநர்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றி வருகிறார்கள் .இதில் ஈடுபட்டுள்ளவர்கள் உங்களைப் பற்றிய தொடர்புடைய தகவல்களைப் பார்க்க முடியும் ,எனவே பல நிறுவனங்களுக்கிடையே செயல்படுகின்ற கூட்டுப் பராமரிப்பை நீங்கள் பெற முடியும் .நீங்கள் உங்களுடைய பயிற்சிGP -ஐ ,மருத்துவமனையைப் பார்வையிடச் செல்லும்போது ,அல்லது உங்களுடைய சமுதாயத்திலோ அல்லது வீட்டிலோ ஆதரவைப் பெறும்போது ,உங்களுடையGP , மருத்துவமனை மருத்துவர் ,மாவட்டச் செவிலியர் அல்லது சமூக சேவகர் போன்ற பராமரிப்பு வல்லுநர்கள் சரியான நேரத்தில் உங்களைப் பற்றிய சரியான தகவலைத் தெரிந்திருப்பதை உறுதி செய்கிறது.

## இது எவ்வாறு மேற்கொள்ளப்படும்?

நார்த் வெஸ்ட் லண்டனின் கூட்டு ஒருங்கிணைந்த பராமரிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு நிறுவனங்கள் உங்களுக்கு சிறப்பான பராமரிப்பை வழங்குவதற்காக உங்களைப் பற்றிய தொடர்புடைய தகவலைப் பகிர்ந்துகொள்கின்றன.

## ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேடு என்றால் என்ன?

ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேடு என்பது சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்புத் தகவலை ஒன்று சேர்ப்பதற்கான ஒரு வழி ஆகும் .உங்களுடைய நோயாளிகளுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டை உருவாக்குவதற்கு தகவல்கள் ஒருங்கிணைக்கப்படும்.

உங்களுடைய பராமரிப்பில் நேரடியாக ஈடுபட்டுள்ள பராமரிப்பு வல்லுநர்கள் அணுகக்கூடிய மருத்துவப் பராமரிப்பு அல்லது சமூகப் பராமரிப்பு வரலாற்றுக்கு இது சாத்தியமாகும் .அதாவது ,உங்களுக்குச் சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் ,உங்களுடைய ஒத்துழைப்புடன் ,உங்களுடைய GP உங்களுக்கு என்ன மருந்துகளைப் பராமரித்துள்ளார் என்பதை ,அல்லது சமீபத்தில் நீங்கள் மருத்துவமனைக்குச் சென்றீர்களா என்பதைப் பார்க்க முடியும் என்பதை இது குறிப்பிடுகிறது .

**உங்களுக்காக ஒருங்கிணைந்த சுகாதாரப் பதிவேடு உருவாக்கப்படுவதை நீங்கள் விரும்பவில்லை எனில் ,நீங்கள் உங்களுடைய–GP க்குத் தெரியப்படுத்த வேண்டும்.**

## என்னென்ன தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படும்?

உங்களைப் பற்றி பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்களில் பின்வருபவை அடங்கும் :

•உங்கள் பராமரிப்புடன் தொடர்புடைய சுகாதாரம் மற்றும் நலவாழ்வுத் தகவல்கள் .

•NHS எண் .

•வயது .

•தொடர்பு விவரங்கள் .

•வாரிசுதாரர் குறித்த விவரங்கள் .

•மருந்துகளும் ஒவ்வாமைகளும் .

•நியமனச் சந்திப்புகள் ,சிகிச்சை மற்றும் பராமரிப்பு .

• உங்களுடைய பராமரிப்பு தொடர்பான சமூக அல்லது மனநலத் தகவல்கள்.

•இரத்தப் பரிசோதனைகள் ,ஆய்வகப் பரிசோதனைகள் ,எக்ஸ்-ரே போன்ற பரிசோதனை முடிவுகள்.

• GPமற்றும் மருத்துவமனைப் பதிவேடுகள்.

## ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேடு உருவாக்குவதனாலும் ,எனது தகவல்களைப் பகிர்ந்து கொள்வதாலும் எனக்கு என்ன பலன் கிடைக்கும் ?

ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டின் மூலம்GP -கள் ,மருத்துவமனைகள் ,மருத்துவர்கள் ,சமுதாயச் சேவைகள் ,சமூகப் பராமரிப்பு மற்றும் மனநலப் பராமரிப்பாளர்கள் ஆகியோர் ஒருவருக்கொருவர் நெருக்கமாக ஒன்றிணைந்து பணியாற்ற முடியும் .

உங்களுக்குச் சிகிச்சையளிக்கும் வல்லுநர்கள் உங்களுடைய பராமரிப்பு குறித்த முழுமையான விவரங்களைச் சுருக்கமாகப் பார்க்க முடியும் .இது பின்வருவனவற்றை உறுதி செய்யும்:

•உங்களைப் பற்றிய தகவல்களையும் மருத்துவப் பின்னணியையும் நீங்கள் ஒருமுறை கூறினால் மட்டும் போதுமானது.

• தேவையற்ற நியமனச் சந்திப்புகள் மற்றும் பரிசோதனைகளை நீங்கள் தவிர்க்கலாம் .

•உங்கள் பராமரிப்பு குறித்த தீர்மானங்களில் நீங்கள் அதிகம் ஈடுபடலாம்.

## மிகவும் தனிப்பட்ட முறையிலான விவரங்கள் சேகரிக்கப்படுமா?

சட்டரீதியாக“ உணர்வுப்பூர்வமானது ”என வரையறுக்கப்பட்ட எந்த ஒரு தகவலையும் நாங்கள் சேகரிக்க மாட்டோம் .இதில் கருக்கலைப்பு ,கற்பழிப்பு ,பாலின மாற்றம் மற்றும் தகாத உறவு ஆகியவை பற்றிய தகவல்கள் உள்ளடங்கும் .

**நீங்கள் பகிர்ந்துகொள்ள விரும்பாத தகவல்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டால் ,உங்களுடைய–GP யிடம் பேசுங்கள்.**

## என்னைப் பற்றிய தகவலை யார் யாரெல்லாம் பார்ப்பார்கள் ?

•GP-கள் ,மருத்துவமனை மருத்துவர்கள் ,செவிலியர்கள் மற்றும் உங்களுடைய பராமரிப்பில் நேரடியாக ஈடுபட்டுள்ள சமூக சேவகர்கள் போன்ற சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு வல்லுநர்கள் .

•உங்கள் நியமனச் சந்திப்புகள் அல்லது உங்கள் சிகிச்சையை ஒருங்கிணைக்கும் உதவிப் பணியாளர்கள்.

•உங்களுடைய அனுமதியுடன் ,நோயாளி பற்றிய ஆலோசனைக் கூட்டங்களில் உங்களுடைய நோய் கண்டறிதல் ,சிகிச்சை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றைப் பற்றி விவாதிக்கின்ற சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு அணிகள்.

## எனது ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேடு எனது முதலாளியிடம் பகிர்ந்துகொள்ளப்படுமா ?

இல்லை .உங்களுடைய ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேடு உங்களுடைய பராமரிப்பில் ஈடுபட்டுள்ளவர்களுடன் மட்டுமே பகிர்ந்துகொள்ளப்படும்.

அனைத்து நிறுவனங்களும் தனிப்பட்ட நபருக்கு கடுமையான தீங்கு அல்லது மன வேதனையை ஏற்படுத்தக்கூடிய தகவல்களை வெளியிடவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டுமென தரவுப் பாதுகாப்புச் சட்டம் சொல்கிறது .தகவல்கள் அனைத்தும் சட்ட விதிமுறைகளின் படி இருப்பதை அவை வெளியிடப்படுவதற்கு முன்னதாக நார்த் வெஸ்ட் லண்டனில் கூட்டுப் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பராமரிப்பு நிறுவனங்களும் உறுதி செய்ய வேண்டும்.

## எனது விவரங்கள் தவறான நபர்களின் கைக்குக் கிடைக்காது என்பதை நீங்கள் எப்படி உத்தரவாதமளிக்க முடியும் ?

உங்களுடைய தகவல்கள் சட்டவிரோதமாக அணுகப்படுவதை நிறுத்துவதற்கு பல முக்கியமான பாதுகாப்பு நடைமுறைகள் எங்களிடம் உள்ளன .

- உங்களுடைய ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டுக்கான அணுகல்“ பங்கு சார்ந்த அணுகல் ”மூலம் கண்டிப்பாக கட்டுப்படுத்தப்படுகிறது .அதாவது உங்களுடைய பராமரிப்பில் ஈடுபட்டுள்ள சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநர்கள் மட்டுமே உங்களுடைய ஒப்புதலுடன் உங்களுடைய பதிவேடுகளைப் பார்வையிட முடியும் .அதுவும் அவர்களுடைய பணியை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களை மட்டுமே அவர்கள் பார்க்க முடியும் .உதாரணமாக ,ஒரு சமூகப் பராமரிப்பாளர் உங்களுடைய மருத்துவக் குறிப்புகளைப் பார்க்க முடியாது .ஏனெனில் ,உங்களுக்குப் பராமரிப்பு வழங்குவதற்காக அவர்கள் அதைப் பார்க்க வேண்டிய தேவை இல்லை .

- உங்களுடைய தகவல்கள் அனைத்தும் சேகரித்து வைக்கப்பட்டுள்ள எங்களுடைய தரவுக் கிடங்கு சமீபத்திய தேசிய பாதுகாப்புத் தர வழிகாட்டுதல்கள் அனைத்திலும் தேர்ச்சி பெற்றுள்ளது .மேலும் இந்த அமைப்பு உங்களுடைய தரவு அணுகலைப் பதிவு செய்வதற்கான உள்ளமைந்த தணிக்கை அம்சத்தையும் கொண்டுள்ளது .எனவே ,உங்களுடைய பதிவேடுகளை முறையற்ற வகையில் யாரும் அணுகவில்லை என்பதை பராமரிப்பு நிறுவனங்கள் உறுதி செய்ய முடியும் .

உங்களுடைய ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டை யார் அணுக முடியும் என்பதை நீங்கள் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் .உங்களுடைய தகவல்களை யார் பார்க்கிறார் அல்லது யார் பார்க்கவில்லை என்பதை நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும்.

# குறிப்பிட்ட ஒரு சிலர் என்னுடைய ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டைப் பார்ப்பதை நான் நிறுத்த முடியுமா?

ஆம் ,குறிப்பிட்ட சேவை நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் உங்களுடைய ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டைப் பார்ப்பதை நீங்கள் விரும்பவில்லை எனில் ,அவர்கள் உங்களுக்குப் பராமரிப்பு வழங்கும்போது அவர்கள் பார்ப்பதற்கான அனுமதியை நீங்கள் மறுக்க முடியும் .

உங்களுடைய ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டைப் பார்ப்பதற்கு முன்னதாக உங்களுடைய பதிவேட்டைப் பார்ப்பதற்கு பராமரிப்பு வல்லுநர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும் .எனவே நீங்கள் ஒப்புக்கொள்வதா அல்லது வேண்டாமா என முடிவு செய்வதற்கான வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்படும்.

# சமூகப் பராமரிப்பு வழங்குகின்ற தனியார் நிறுவனங்கள் எனது விவரங்களை அணுக முடியுமா ?

உங்களுடைய ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டின் அடிப்படைக் கூறுகள் உங்களுக்குப் பராமரிப்பு வழங்குவதற்காக ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள தனியார் நிறுவனங்கள் அல்லது முகமைகளுடன் பகிர்ந்துகொள்ளலாமா என்பதை நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும் .

நிறுவனமும் அவற்றின் பணியாளர்களும் எந்த வகையான தகவல்களைப் பார்க்க முடியும் என்பது உங்களுடைய பராமரிப்புச் சேவைக்கு அவர்கள் என்ன வழங்க வேண்டும் என்பதைச் சார்ந்துள்ளது.

**உங்களுடைய தகவல்கள் வர்த்தக நோக்கங்களுக்காக பகிர்ந்துகொள்ளப்பட மாட்டாது அல்லது விற்பனை செய்யப்பட மாட்டாது.**

# எனது தகவல்கள் எவ்வாறு பாதுகாக்கப்படும்?

தரவுப் பாதுகாப்புச் சட்டம்1998 -இன் கீழ் உங்களுடைய தகவல் பாதுகாக்கப்பட்டுள்ளது ,அதன் மூலம் உங்களுடைய தனிப்பட்ட தகவல் உங்களுடைய பராமரிப்புக்கு ஆதரவளிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்படும் .வேறு யாரிடமும் அது பகிர்ந்துகொள்ளப்பட மாட்டாது அல்லது விற்பனை செய்யப்பட மாட்டாது.

## Care. Dataஉடன் இது எவ்வாறு ஒப்பிடப்படுகிறது?

Care. Dataஎன்பது ஒரு தேசியத் திட்டம் ஆகும் ,மற்றும் இது நார்த் வெஸ்ட் லண்டனின் ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேடுகள் திட்டத்திலிருந்து வேறுபட்டதாகும் .கூட்டு ஒருங்கிணைந்த பராமரிப்பின் ஒரு பகுதியாகவும் ,ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டின் ஒரு பகுதியாகவும் நார்த் வெஸ்ட் லண்டனில்

பகிர்ந்துகொள்ளப்பட்ட தகவல் பிரத்யேகமாக உள்ளூரில் பயன்படுத்துவதற்கானது ஆகும் .அதை தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாக பயன்படுத்தக் கூடாது .

## நீங்கள் கேள்விப்பட்டிருக்கக் கூடிய இதர NHS முயற்சிகள்

சுருக்கப் பராமரிப்புப் பதிவேடு என்பது நோயாளிகளைப் பற்றிய ஒவ்வாமைகள் ,மருந்துகள் மற்றும் பாதக விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தகவலைக் கொண்டுள்ள ஒரு மின்னணுப் பதிவேடு ஆகும் .இது GP அமைப்புகளிலிருந்து பெறப்படுகின்றது ,இதை ஒரு நோயாளியின் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள சுகாதார வல்லுநர்கள் பார்க்க முடியும்.

சுருக்கப் பராமரிப்புப் பதிவேடு என்பது ஒருGP -யுடன் பதிவு செய்துள்ள அனைத்து நோயாளிகளுக்கான ஒரு தேசியத் திட்டம் ஆகும் .

இந்தத் திட்டத்தை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்க முடியும் ,மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டைப் போலவே ,உங்களுடைய பராமரிப்பு வல்லுநர்கள் இந்தத் தகவல்களை அணுக விரும்புகின்ற ஒவ்வொரு முறையும் உங்களுடைய ஒப்புதல் கேட்கப்படும் .உங்களுடைய சுருக்கப் பராமரிப்புப் பதிவேட்டுத் தகவலுக்கான அணுகல் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதன் அடிப்படையில் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றது .அனைத்துத் தகவல்களும் ஒரே இடத்தில் சேமித்து வைக்கப்பட்டிருப்பது அவசரநிலையின்போதோ ,அல்லது நோயாளிகளின் GP சிகிச்சையகம் திறக்காத சமயத்திலோ அவர்களுக்கு சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்கள் எளிதாகச் சிகிச்சையளிக்க உதவுகிறது.

## நான் எனது ஒப்புதலை எப்பொழுது மற்றும் எப்படிக் கொடுப்பது

பராமரிப்பு மையத்தில் ஒப்புதல் கொடுக்கப்படுகின்றது .மூத்த செவிலியர்கள் ,ஆலோசனை வழங்கும் மருத்துவர்கள் ,முதுமை நோய் மருத்துவர்கள் ,குழந்தை மருத்துவர்கள் மற்றும் மனநல மருத்துவர்கள் போன்ற பல்வேறு பராமரிப்புத் தொழில்களில் பணிபுரியும் ஊழியர்களை உள்ளடக்கிய பராமரிப்பு வல்லுநர்களைக் கொண்ட அணிகள் சமுதாயச் செவிலியர்கள் ,சிகிச்சையாளர்கள் ,மருந்தாளுநர்கள் , உளவியல் அறிஞர்கள் ,சமூக சேவகர்கள் மற்றும் இதர பணியாளர்களுடன் இணைந்து பணிபுரிய வேண்டும் . அவசரநிலை இல்லாவிட்டால் ,உங்களுடைய நேரடி ஒப்புதல் பெறப்படாத வரை உங்களுடைய பதிவேடுகளை அணுக முடியாது.

## எனது ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டை நான் பார்வையிட முடியுமா?

நோயாளிகள் தங்களுடைய ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டைப் பார்வையிடுவதை எளிமையாக்குவதற்கு நாங்கள் உறுதிகொண்டுள்ளோம் .மற்றும் நீங்கள் உள்நுழைந்து தகவல்களைப் படிப்பதை இயலச் செய்வதற்கான ஒரு இணையதளத்தை உருவாக்குவதற்கு நார்த் வெஸ்ட் லண்டன் முழுவதும் உள்ள எங்களுடைய கூட்டாளர்களுடன் இணைந்து நாங்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறோம் . இந்த வேலை2016 -இல் நடந்துகொண்டிருக்கிறது .

## கற்றல் குறைபாடுடைய நபர்களுக்கு அவர்களுடைய தகவல்களைப் பகிர்ந்து கொள்வது பற்றிய தகவலளிக்கப்பட்ட ஒப்புதலை உருவாக்குவதற்கு யார்

## உதவி செய்வார் ?

கற்றல் குறைபாடுடைய நபர்களுக்கு உதவக்கூடிய பராமரிப்பு வழங்குநர்கள் சட்டரீதியான ஒப்புதலைப் பெறுவதையும் ,நோயாளியின் பதிவேடுகள் தரவுப் பாதுகாப்புச் சட்டம்1998 -இன் கீழ் சட்டப்பூர்வமாக அணுகப்படுவதையும் உறுதி செய்வதற்கு நிறுவனக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளனர் .

திறமையற்ற ஒருவரின் சார்பாக முடிவெடுப்பதற்கான வழக்கமான தேவைகள் பொருந்தும் .

## நான் ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டைப் பெற்றிருப்பதும் ,எனது தகவல்களைப் பகிர்ந்துகொள்வதும் கட்டாயமானதா?

நீங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறீர்கள் .நீங்கள்‘ தேர்ந்தெடுப்பதற்கு ’தேர்ந்தெடுக்க முடியும் ,அதாவது ஒருங்கிணைந்த பராமரிப்புப் பதிவேட்டைப் பெறாமல் இருப்பதற்கும் ,உங்களது தகவல்களைப் பகிர்ந்துகொள்ளாமல் இருப்பதற்கும் நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும்

உங்களுடைய தகவல்களைப் பகிர்ந்துகொள்வது பொதுவாக உங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருந்தால் , நீங்கள் பின்வருவனவற்றுக்கு ஒப்புக்கொள்வீர்கள்:

- உங்களைப் பற்றிய தகவல் உங்களுக்குப் பராமரிப்பு வழங்கும் சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படுகின்றது .
- உள்ளூர் சேவைகளுக்குத் திட்டமிடுவதற்காகவும் ,அனைவருக்குமான பராமரிப்பை மேம்படுத்துவதற்காகவும் பெயர் குறிப்பிடப்படாமல் உள்ளூர் மற்றும் சமூகப் பராமரிப்பு நிறுவனங்களுடன் தகவல்) உங்களுடைய தனிப்பட்ட விவரங்கள் இல்லாதவை ( பகிர்ந்துகொள்ளப்படும் .
- உங்களுக்கு நேரடிப் பராமரிப்பு வழங்குவதற்காக சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு வல்லுநர்கள் உங்களைப் பற்றிய தகவல்களை மட்டுமே பார்க்க முடியும் .
- உங்களைப் பற்றிய தகவல்கள் தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்பட மாட்டாது .
- சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநர்கள் உங்களுடைய பதிவேடுகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

**நீங்கள் உங்களுடைய மனதை மாற்றிக்கொள்ள முடியும் அல்லது எந்த நேரத்திலும் உங்களுடைய தகவல்களை மற்றவர்கள் பார்ப்பதை நிறுத்துவதற்குத்‘ தேர்ந்தெடுக்க முடியும்’. நீங்கள் இதைச் செய்ய விரும்பினால் ,உங்களுக்குப் பராமரிப்பு வழங்குகின்ற சுகாதார அல்லது பராமரிப்பு நிறுவனத்திடம் தயவுசெய்து சொல்லுங்கள்.**

## கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விஷயங்கள்

நோயாளிகள் தங்களது பதிவேடுகளைப் பகிர்வதற்கும் கட்டுப்பாடான முறையில் அணுகுவதற்கும் வசதியை உண்டாக்கித் தருவதே எமது நோக்கமாகும் .உங்கள் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும்போது நீங்கள் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய சில விஷயங்கள் பின்வருமாறு :

•உங்கள் பதிவேடுகள் அனைத்தையும் பகிரவேண்டிய அவசியமில்லை ;யார் எதைப் பார்க்க வேண்டுமென்பதை நீங்கள் உங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் வைக்கலாம் .

•உங்கள் பதிவேடுகளை அணுகுவதற்கு நண்பர்கள் அல்லது குடும்பத்தினரை நீங்கள் அனுமதித்திருந்தால் , அவர்கள் எந்தெந்த தகவல்களைப் பார்க்கிறார்கள் என்பதையும் நீங்கள் உங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் வைக்கலாம் .

•உங்கள் பதிவேடுகளில் நீங்கள் ஏதேனும் பிழையைக் கண்டறிந்தால் ,உடனடியாக உங்களுடைய பராமரிப்பு வல்லுநரைத் தொடர்பு கொள்ளவும்

## உதவியளித்தல் மற்றும் பராமரிப்பை மேம்படுத்துதல்

நார்த் வெஸ்ட் லண்டனில் வசிக்கும் மக்களுக்கான உள்ளூர் சேவைகளைத் திட்டமிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் உங்கள் தனிப்பட்ட விவரங்களை உள்ளடக்காத சில தகவல்கள் சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு ஸ்தாபனங்களுடன் பாதுகாப்பான முறையில் பகிர்ந்து கொள்ளப்படலாம் .பராமரிப்பைத் திட்டமிட மற்றும் வழங்க ,இந்த அநாமதேயத் தகவல்கள் உதவக்கூடும் .அளிக்கப்படும் சேவைகளின் தரம் குறித்தும் கண்காணிக்க எங்களுக்கு உதவும்.

## இதுகுறித்து மேலும் அறிய விரும்புகிறீர்களா ?

உங்களுக்கு மேலும் தகவல் தேவைப்பட்டால் :

•உங்களுக்கு பராமரிப்பை வழங்கும் சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநரிடம் பேசுங்கள் .

•மின்னஞ்சல்share :4care@nhs.net

•பார்வையிடவும்www :.integration.healthiernorthwestlondon.nhs.uk